பக்கங்கள்:-19

# காலை முரசு

## சிரேஷ்ட ஊடகர் பாரதியின் இறுதிக்கிரியைகள் நாளை



சிரேஷ்ட ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக் 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 31 | புதன்கிழமை | 12.02.2025 | அதிர்வு 194




"தையிட்டி தமிழர் சொத்து! சட்டவிரோத விகாரையை அகற்று!!"

# அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இரவிரவாகத் தொடரும் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக் கோரி அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இரவிரவாகக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தையிட்டியில் பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்து அடாத்தாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக் கோரியும், மக்களின் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் நேற்று மாலை 4 மணிக்கு இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 06








சீனாவின் தூதரக அதிகாரிகள் குழு ஒன்று வடக்குக்கு வந்து திரும்பிச் சென்றிருக்கின்றது.

வடக்கு மக்கள் மீது அதீத பற்றுப் பாசம் கொண்டவர்கள் போல காட்டி, அவர்களை வளைத்துப் போட்டு, அவர்கள் மத்தியில் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல ஊடுருவும் சீனத் தூதரகத்தின் முயற்சி இந்த முறையும் பெரும் பலன் தந்ததாக தெரியவில்லை.

வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணம் என்ற கணக்கில், 'சீனாவின் சகோதர பாசம்' என்னும் பெயரில் தூதரகம் முன்னெடுத்த முயற்சி, அவ்வளவு தூரம் மக்களுக்குள் ஊடுருவச் சாத்தியமானதாக அமையவில்லை என்றே தெரிகின்றது. ஏதோ கிடைத்த வரையில் லாபம் என்ற கணக்கில் சகோதர பாசத்தில் கிடைத்ததை பொதுமக்கள் பெற்றுக் கொண்டனர். அவ்வளவு தான்.

வழமை போல இம்முறையும் யாழ் பல்கலைக் கழகத்துக்குள் ஊடுருவ சீனத் தரப்பு எடுத்த நகர்வு வெற்றி அளிக்கவில்லை என்றும் 06

# நிதித் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் கீழ் யோஷிதவிற்கு எதிராக வழக்கு தாக்கல்

நிதித் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் கீழ் யோஷித ராஜபக்ஷ விற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகசந்திப்பின் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனை கூறினார்.

யோஷித்த ராஜபக்ஷ விற்கு எதிராக 2016 ஆம் ஆண்டு முதல் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர், யோஷிதவின் வங்கிக் கணக்கிலிருந்த 59 மில்லியன் ரூபா தொடர்பாகவே இந்த விசாரணை நடத்தப்பட்டதாகக் கூறினார்.

இந்த நிதியை எவ்வாறு பெற்றார் என அவர் இதுவரையில் தெளிவுபடுத்தவில்லை எனவும் அதற்கமைய நிதித் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின்கீழ் அவருக்கு எதிராக விசாரணையை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

டேசி பொரஸ்ட் என்பவருக்கு சொந்தமான வங்கிக் கணக்கிலும் அவர் இந்த நிதியை சேமித்து வைத்திருந்தமை விசாரணைகளூடாக அறியக்கிடைத்ததாகவும் டேசி பொரஸ்ட் என்ற பெண்ணையும் சந்தேகநபராக பெயரிடுமாறு சட்ட மாஅதிபர் ஆலோசனை வழங்கியதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.



யோஷித ராஜபக்ஷ வுக்கு எதிராகவும் டேஷி பொரஸ்ட்டுக்கு எதிராகவும் கடுவலை நீதிமன்றத்தில் யோசனைகளை இலங்கை பொலிஸ் பெற்றதாகவும் அந்த பெண்ணுக்கு எதிராக வெளிநாட்டு தடையுத்தரவு பெறப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# அரச சேவையில் 7,456 பதவி வெற்றிடங்கள் ஆட்சேர்ப்புக்களுக்கு அமைச்சரவை அனுமதி



அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பணிக்குழாமினரை முகாமைத்துவம் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளுக்கமைய 7 ஆயிரத்து 456 பதவி வெற்றிடங்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்து தேவைகள், முன்னுரிமைகள் மற்றும் நேர அட்டவணையை அடையாளம் கண்டு, அது தொடர்பாக கட்டாயமாக ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய அளவை அடையாளம் கண்டு அதற்கமைய, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகப் பிரதமரின் செயலாளர் தலைமையில் அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்காகக் கடந்த ஆண்டு டிசம்பர் 30ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

குறித்த குழுவுக்கு அந்தந்த அமைச்சுக்களால், அவற்றின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேண்டுகோள்களைக் கருத்தில்கொண்டு அந்தக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்காக அந்தந்த அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்காக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நிலவும் 3 ஆயிரம் பதவி வெற்றிடங்களையும், பாதுகாப்பு அமைச்சில் நிலவும் 9 பதவி வெற்றிடங்களையும், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சில் நிலவும் 179 பதவி வெற்றிடங்களையும், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சில் நிலவும் 132 பதவி வெற்றிடங்களையும் நிரப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சில் 400 பதவி வெற்றிடங்களையும், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சில் நிலவும் 161 பதவி வெற்றிடங்களையும், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் நிலவும் 3 ஆயிரத்து 519 பதவி வெற்றிடங்களையும், மேல் மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் நிலவும் 39 பதவி வெற்றிடங்களையும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிலவும் 17 பதவி வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூடு; விசாரணைகளுக்கு 4 குழுக்கள்



கொட்டாஞ்சேனை – பெனடிக் மாவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பான விசாரணைகளில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு உள்ளிட்ட 4 குழுக்கள் ஈடுபடுத்தக்கப்பட்டுள்ளன.

துப்பாக்கிப் பிரயோகத்தில் ‘பூகுடு கண்ணா’ எனப்படும் போதைபொருள் கடத்தல்காரரின் உதவியாளர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குடு செல்வி எனும் பெண்ணின் தரப்பினால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்,

முச்சக்கர வண்டியொன்றுக்கு அருகில் நின்றிருந்த ஒருவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

43 வயதான மேற்படி நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# நுரைச்சோலை நாளை வழமைக்கு திரும்பும்



நுரைச்சோலை மின்நிலையத்தின் மின்னுற்பத்தி நடவடிக்கைகள் நாளை வியாழக்கிழமை வழமைக்கு திரும்புமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை மின்நிலையத்தின் மின்னுற்பத்தி ஆரம்பிக்கப்படும்பட்சத்தில் மின்வெட்டு அமுலப்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்படாதென மின்சார சபை ஊடகப்பேச்சாளர் தம்மிக்க விமலரத்ன தெரிவித்தார்.

நாளொன்றுக்கு 2400 மெகாவோட் மின்சார தேவை நாட்டில் நிலவுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நாள்களில் 2400 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாகவும் ஊடகப்பேச்சாளர் தம்மிக்க விமலரத்ன தெரிவித்துள்ளார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

(ராமு தனராஜா)

ஐஸ் மற்றும் கஞ்சா போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கிராந்துருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனை பகுதியைச் சேர்ந்த ரிதிமாலியத்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 31 வயதுடைய பொலிஸ கான்ஸ்டபிளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேகநபரிடம் இருந்து 25 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும், 3 ஆயிரத்து 600 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் அவரை மஹியங்கனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மஹியங்கனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1962 | | 2025 |
| 09 | | 02 |
| 06 | | 09 |



## இராஜநாயகம் பாரதி

### (மூத்த ஊடகவியலாளர் )

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பையும் திருநெல்வேலியையும் வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி கடந்த சனிக்கிழமை (09.02.2025) அன்று திருநெல்வேலியில் அவர் வாழ்ந்த இல்லத்தில் காலமானார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல கணித ஆசிரியர் சு. இராஜநாயகம் - சிவயோகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வடமராட்சி விவாகப் பதிவாளர் சி. தாமோதரம்பிள்ளை - தனலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும் தேவகியின் அன்புக் கணவரும் பார்த்தீபனின் பாசமிகு தந்தையும் அமரர் பரதன் , சுரபி ஆகியோரின் அன்பு சகோதரனும் ப. விநோதினி, க.சிவராசா, சுகந்தி, கௌரி, காலஞ்சென்ற நளினி, பரன், பாமதி, சபேசன், பத்மநிதி, சுபேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்


அன்னாரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக 105/1 பலாலி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை 13. 02. 2025 வரை வைக்கப்படும்.

வியாழன் அன்று காலை 9:00 மணியளவில் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டு 11:00 மணியளவில் ஈமக் கிரிகைகளைத் தொடர்ந்து 1:30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு :
077 189 4012 (மனைவி)
+44(0)7580763790 (மைத்துனர்)





# மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைக்க குழு நியமனம்

தேசிய மின் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு ஐவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர், பொறியியலாளர் குமார ஜயகொடியின் ஆலோசனைக்கு அமைய இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்று கிழமை ஏற்பட்ட திடீர் மின்தடையை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால குறிப்பிட்டார்.

குழுவின் தலைவராக பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் லிலாந்த சமரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

திடீர் மின்தடைகள் ஏற்படுவதை தடுக்கும் வகையிலான நீண்ட கால மற்றும் குறுகிய கால பரிந்துரைகளை இந்த குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒருவாரத்திற்குள் இந்த பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு குறித்த குழுவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால தெரிவித்துள்ளார்.

# சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளரை சந்தித்தார் பிரதமர்



பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியத்தை நேற்று முன்தினம் சந்தித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையின் வரிக் கொள்கை, வரி வருமானத்தை திறம்பட நிர்வகித்தல், பொதுத்துறையின் செயற்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் உள்ளிட்ட பொருளாதார காரணிகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல், நிலையான வளர்ச்சியை நோக்காகக் கொண்ட கொள்கை ரீதியான காரணிகள் மற்றும் அரசாங்கத்தின் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிகின்றது.

தமது இசைவுக்கு அசைய ஆடாத யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடர்பில் சீனத் தூதரகம் கடும் கடுப்பில் இருப்பதாகவும் அறிய முடிந்தது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒரு தடவை இங்கு சீன தூதுவரே வந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் ஊடுருவும் காய் நகர்த்தலை முன்னெடுத்த போது, அதற்கு யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் இணங்க மறுத்து முரண்டுபிடித்தமையால், சீனத் தூதுவர் யாழ் ஊடக அமையத்துக்குப் போய் "யாழ். பல்கலைக்கழகம் எங்களுடன் கைகோர்க்க மறுக்கிறது" – என்று பகிரங்கமாகப் புலம்பித் தள்ளிவிட்டுச் சென்றார் என்பதை மறந்து விட முடியாது.

இதேபோலத் தான் கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு முன்னரும் நடந்தது.

பல்கலைக்கழகமொன்றுக்கு இருக்கக்கூடிய சட்ட வரையறைகளுக்கு உட்படாமல் ஒரு தரப்பாரால் மட்டும் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை ஒன்றில் கையொப்பமிடுமாறு மறுதரப்பாரான யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு சீனத் தரப்பு அப்போது அழுத்தங்களைக் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. அந்த அழுத்தங்களுக்கு அடி பணியாமல் உரிய தேவைப்பாடுகளைப்பூர்த்திசெய்து-முறையாக அந்தந்தச் சட்ட ஏற்பாடுகளின் ஊடாக கல்வி அமைச்சின் அனுமதி பெற்று வருமாறு – யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் முகத்தில் அடித்தாற் போல சீன தரப்புக்குக் கூறிவிட்டமையே அப்போதைய பிரச்சினை என்று தெரிய வந்தது.

கடந்தமுறைக்குச் சற்றும் மாற்றமே இல்லாமல், இம்முறையும் எதுவித சட்ட ஒழுங்குகளையும் பின்பற்றாமல் பின்கதவால் உள்நுழைய முயன்றதனாலேயே தூதரகத் தரப்பு இம்முறையும் யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் வாங்கிக்கட்டி, மூக்குடைபட்டுக் கொண்டது என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அரச பல்கலைக்கழகமொன்று வெளிநாட்டுத் தரப்புகளுடன் – தூதரகங்களுடன் – நேரடியாக ஊடாட முடியாது என்பது அநுர அரசாங்கத்தின் கட்டாயமான கட்டளைகளில் ஒன்று. ஜனாதிபதி செயலகத்தினால் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்ட 01/ 2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தில், பல்கலைக்கழகங்கள் உட்பட அரசாங்க நிறுவனங்கள் வெளிநாடுகளுடன் – வெளிநாட்டுத் தூதரகங்களுடன் அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள், அமைப்புக்கள் போன்ற நிறுவனங்களுடன் – தொடர்பாடலை மேற்கொள்ளவதாயின் பின்பற்றப்ப வேண்டிய நெறிமுறைகள் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னைய அரசாங்கத்தின் காலத்திலும் – வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் இராகவன் உயர்கல்விப் பிரதி அமைச்சராகப் பதவி வகித்த காலத்திலும் – வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளைக் கையெழுத்திடும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் இறுக்கமாக வரையறுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், பல்கலைக்கழகத்தின் எந்தவொரு அதிகார மட்டத்திலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சு மட்டங்களில், சட்ட ஏற்பாடுகள் குறித்த ஆராய்வுகள் எதற்குமிடமின்றி தங்களால் – ஒரு தரப்பாகத் தயாரிக்கப்பட்ட – உடன்படிக்கையில் யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்தைக் கையெழுத்திடுமாறு சீனத் தூதரகம் அழுத்தம் கொடுத்துப் பணித்திருக்கின்றதாம். இந்த அபத்த அழுத்தத்துக்கு பல்கலைக்கழக நிர்வாகம் அடங்க – இணங்க – மறுத்ததால் அதன் மீது செமக் கோபத்துடன் கொழும்பு திரும்பியிருக்கின்றது சீனக் குழு எனத் தெரிகின்றது.

இம்முறையும், வருடாந்தம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் சீனத்தூதுவர் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் உதவிபெறும் மாணவர்களைச் சந்திப்பதற்கான நிகழ்வைத் தாங்களே ஒழுங்குபடுத்தி, அதற்கான நேரத்தையும் ஒதுக்கி, நிகழ்ச்சி நிரலையும் தயாரித்து விட்டு, நிகழ்வுக்கு முதல் நாளன்று பல்கலைக்கழகத்துக்கு அறிவித்து நிகழ்வை முன்னெடுக்குமாறு உத்தரவிட்டிருக்கின்றது சீனத் தூதரகம்.

அதற்கும் பல்கலைக்கழக நிர்வாகம் முகத்தில் அடித்தால் போல பதில் கூறி, நிகழ்ச்சியையே கடாசி விட்டது.

இந்த விடயத்தில் சீனத்தூதரகத்துக்கு முகத்தில் கறுப்பு ஏற்பட்டிருந்தாலும், தூதரகம் பிழையாக வழிநடத்தப்பட்டிருக்கிறது என்பதே உண்மை. சம்பவம் பற்றி ஆராய முனைந்தபோது, பின்னணியில் இருக்கும் சில கறுப்பு ஆடுகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் எல்லாவற்றுக்கும் அடிவருடிப் பணி செய்து, அண்டிப்பிழைக்கும் படித்தவர்கள் சிலரால் தூதரகம் பிழையாக வழிநடத்தப்பட்டதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

சீனத்தூதரகமும், தற்போதைய பிரதமரான கல்வி அமைச்சரும் நெருக்கமானவர்கள் என்று நம்பும் ஒரு சில பேராசிரியர்கள் தங்கள் 'வேந்தர்' கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்காக – தற்போதைய துணைவேந்தரைப் 'போட்டுத் தள்ளும்' (அல்லது மாட்டிச் சிக்க வைக்கும்) இலக்கோடும் நோக்கோடும் செயற்பட்டிருக்கிறார்கள் என்பது அரசல்புரசலாகத் தெரிய வந்தது.

முன்னைய அரசாங்கங்களில் வெளிநாட்டுத் தூதுவர் பதவியொன்றையாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்று திரையரங்குகளின் படி ஏறி, இறங்கியவர்கள் பேரவை உறுப்பினர் பதவியையாவது பெற்றுக் கொண்டனர். இப்போது, ஆட்சி மாறியதும் ஆளுங்கட்சியின் அலுவலகத்தில் கூட்டித்துடைத்தாவது 'வேந்தர்' மற்றும் 'துணைவேந்தர்' பதவிகளைப் பெற்றுவிடவேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறார்கள். இப்போதைய அரசாங்கத்தோடு நல்லுறவைப் பேணும் வெளிநாடுகளில் ஒன்றாகச் சீனாவை இனங்கண்டு அதன் தூதரகத்துக்குக் கூஜா தூக்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

அதுதான் இதற்குள் புதைந்து கிடக்கும் ஒரே உள்சூக்குமம்...!

---

## சிரேஷ்ட ஊடகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் ஊடகப் பரப்பில் 40 வருடங்களுக்கு மேல் ஊடக அனுபவத்தைக் கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி, சுகவீனம் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

யாழ்ப்பாணம் – பலாலி வீதியில், திருநெல்வேலியில் (திண்ணை ஹோட்டலுக்கு முன்பாக) அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் இறுதிக்கிரியைகள் மற்றும் அஞ்சலி உரைகள் இடம்பெற்று புகழுடல் தகனக்கிரியைகளுக்காக மதியம் 1 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

---

## அச்சுறுத்தல்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது கட்சி பேதங்களைக் கடந்து பெருமளவிலான மக்கள் திரண்டு பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அந்தப் பகுதியில் பெருமளவிலான பொலிஸாரும் குவிக்கப்பட்டு விகாரைக்கான பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

அதேநேரம் பொலிஸ், இராணுவப் புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டு போராட்டக்காரர்கள் மீதான கண்காணிப்பும் அதிகளவில் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறு கடும் எதிர்ப்புக்கள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நேற்று மாலை முதல் இரவிரவாகத் தொடர்ந்தும் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இந்தப் போராட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களின் உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

இன்று காலை பலரும் ஒன்றுதிரண்டு

07▶





# குரங்கின் மீது பழி சுமத்தி மக்களை ஏமாற்ற முயலாதீர்

## அரசுக்கு எதிர்க்கட்சி எச்சரிக்கை



“உள்நாட்டுப் போரின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் 33 ஆயிரம் மெகாவோல்ட் மின் பிறப்பாக்கியைத் தீயிட்டுக் கொளுத்தியபோது கூட நாடளாவிய ரீதியில் மின்துண்டிக்கப்படவில்லை. அவ்வாறிக்கையில் குரங்கின் மீது பழி சுமத்தி குரங்கு சேட்டைகள் காண்பிக்க வேண்டாம். அளவுக்கதிகமாக மக்களை ஏமாற்றவும் முற்பட வேண்டாம்.”

– இவ்வாறு அநுர அரசை எச்சரித்துள்ளது ஐக்கிய மக்கள் சக்தி.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஞாயிறன்று ஏற்பட்ட மின்தடைக்கு மின்சக்தி அமைச்சர் குரங்குகள் மீது பழி சுமத்தினார். 33 ஆயிரம் மெகாவோல்ட் கொண்ட மின் பிறப்பாக்கி விடுதலைப்புலிகளால் தீ வைக்கப்பட்டபோது கூட இவ்வாறு நாடளாவிய ரீதியில் மின்சாரம் துண்டிக்கப்படவில்லை.

அவ்வாறிருக்கையில் ஒரு குரங்கால் முழு நாட்டுக்கும் மின் துண்டிப்பை ஏற்படுத்த முடியுமா? மின்சக்தி அமைச்சரால் குறிப்பிடப்பட்ட இந்தக் கருத்து பாரிய சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், பின்னர் கடந்த அரசின் செயற்பாடுகளே இதற்குக் காரணம் என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த அரசுகளின் குறைகளைக் கூறியே இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். தற்போது ஆட்சியில் இருந்து கொண்டும் இதனையே கூறுகின்றனர்.

முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்தியதாகக் கூறியவர்களின் இயலாமை தற்போது வெளிப்பட ஆரம்பித்துள்ளது. நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திலுள்ள மின் பிறப்பாக்கிகள் செயலிழந்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டது எனக் கூறினர்.

கடந்த காலங்களில் நுரைச்சோலை மின் பிறப்பாக்கிகள் செயலிழந்த சந்தர்ப்பங்களில், அது தொழிற்சங்க மாபியாக்களின் செயல் என விமர்சித்தனர். அவ்வாறெனில் இந்த அரசுக்கும் அந்த மாபியாக்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளதா?

சூரிய மின் உற்பத்தி களங்களால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு அதிகம் என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் குறிப்பிடுகின்றது.

சூரிய மற்றும் காற்றாலை மின் உற்பத்திகள் பிரபலமாகும் பட்சத்தில் நிலக்கரி மற்றும் டீசல் மாபியாக்களுக்குப் பாதிப்பு ஏற்படும். எனவே, அந்த மாபியாக்களைப் பாதுகாப்பதற்காகவே இவ்வாறான கதைகள் கூறப்படுகின்றன.

இந்த மாபியாக்களின் தேவைக்கேற்ப செயற்படுவதற்கு அரசு இணங்கியுள்ளதா? நுரைச்சோலை மின்பிறப்பாக்கிகள் செயலிழக்கப் போவதை அறிந்தே அரசு அதற்கு இடமளித்திருக்கின்றது. இந்த உண்மையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மேடைகளில் வீர வசனம் பேசுவதை விட, நடைமுறையில் ஆட்சி செய்வது சிக்கல் என்பதை இப்போது ஜே.பி.வி. புரிந்து கொண்டிருக்கும். ஏனைய ஆட்சிக் காலங்களில் இவ்வாறு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தால் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலில் இருப்பதாகக் குறிப்பிட்டு வீதிக்கு இறங்கியிருப்பர்.

தமது ஆட்சி என்பதால் மௌனமாக இருக்கின்றனர். அளவுக்கதிகமாக மக்களை ஏமாற்ற முற்பட வேண்டாம். மஹிந்தவை ஆட்சியில் அமர்த்தி, அவரைத் துரத்துவதற்கு மைத்திரிக்கு வாக்களித்து பின்னர் கோட்டாபயவை நாட்டை விட்டு ஓடச் செய்தவர்களே உங்களையும் ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றனர் என்பதை மறந்து விட வேண்டாம்.” – என்றார்.

---

### அச்சுறுத்தல்களுக்கு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பாரியளவிலான எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பெரும் போராட்டத்தில் அச்சுறுத்தல்களையும் தாண்டி அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கவனவீர்ப்புப் போராட்டம் இன்று மாலை 6 மணிக்கு நிறைவடையவுள்ளது.













# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசமைப்பு உருவாக்கம்

புதிய அரசமைப்பு ஒன்றை தயாரித்து நடைமுறைக்குக் கொண்டு வருவது - அதுவும் நாட்டுக்குப் பொருந்தும் வகையிலான புதிய அரசமைப்பு ஒன்றை தயாரிப்பது - அத்தனை இலகுவானதொரு விடயமல்ல என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆயினும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தாம் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிப்படி புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்குரிய காலவரையறையொன்றை நிர்ணயித்து, உரிய நகர்வுகளை ஆரம்பிக்க வேண்டும். மாறாக புதிய அரசமைப்பு உருவாக்க செயன்முறையை அநாவசியமாக தாமதப்படுத்துவது ஜனாதிபதியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக அமையும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

- இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையைப் புதுயுகத்தை நோக்கிப் பயணிக்கச் செய்வதற்கு அரசமைப்பு மறுசீரமைப்பை மேற்கொள்வது மிக அவசியமென நாம் உறுதியாக நம்புகிறோம். இது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விசேட அவதானம் செலுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம் என்றும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான அந்த இயக்கம் மேலும் கேட்டுள்ளது.

இந்த அரசலைப்பு மறுசீரமைப்பு செயன்முறையானது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக கோட்பாடுகளுக்கு அமைவாகவும், இந்நாட்டின் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தக்கூடியதுமான விதத்தில் அமைய வேண்டுமென எதிர்பார்க்கிறோம் என்றும் அந்த இயக்கம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இங்குதான் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான சிக்கல் சரியாக தொடப்படுகின்றது என்று கூற லாம்.

உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக கோட்பாடுகளுக்கு அமைவாக அரசமைப்பை உருவாக்குதல் என்பது தான் சர்ச்சைக்குரிய விடயமாக இருக்கின்றது.

ஜனநாயகக் கோட்பாடு என்பது வெறுமனே அட்சர கணித பெறுபேறுகளின் அடிப்படையில் அமைவதாக இருக்கக் கூடாது. இருக்கவும் முடியாது.

பெரும்பான்மையானோர் கூறுவதுதான் ஜனநாயகத் தீர்மானம் - தீர்ப்பு - என்றாலும் அது நீதியானதா, நியாயமானதா, ஒழுங்குமுறையானதா என்பதையும் உறுதிப்படுத்தவும் வேண்டும்.

நீதியற்ற - நியாயமற்ற - ஒழுங்குமுறையற்ற - ஒரு முடிவு, அட்சர கணித எண்ணிக்கையில் பெரும்பான்மையானோரின் தீர்மானத்துக்கு அமைய முடிவாக எடுக்கப்படுமானால் அது ஜனநாயக ரீதியில் சரியானதாக இருந்தாலும், தார்மீக ரீதியில் நீதி, நியாயமான, ஒழுங்கான முடிவாகி விட முடியாது.

ஆகவே வெறுமனே அட்சர கணித எண்ணிக்கையில் தீர்மானங்களை எடுக்கும் விடயத்தை உண்மையான ஜனநாயகமாக ஏற்க முடியாது என்பதை புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்திலும் ஆளும் தரப்பு கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஜனநாயகத்தின் மகோன்னத தீர்மானம் என்ற பெயரில் பெரும்பான்மையானோரின் முடிவை - அது, நீதி, நியாயமற்ற போதிலும் தீர்க்கமான முடிவாக தீர்மானிப்பது தவறு.

இலங்கையில் புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் வெறுமனே அட்சர கணித எண்ணிக்கையின் அடிப்படையிலான பெரும்பான்மையை தீர்வுக்குரிய முறைமையாகக் கொள்ளக் கூடாது.

மாறாக, நீதி, நியாயம், ஒழுங்குமுறை அடிப்படையில் விடயங்களை தீர்மானித்து, அவற்றின் அடிப்படையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

# அரசு பொய்களை அள்ளி வீசி உண்மையை மறைக்க முடியாது

## மின் விநியோகத் தடை தொடர்பில் சஜித் கருத்து



"மின்சக்தித் துறையை உள்ளடக்கிய அனைத்து துறைகளிலும் மேற்கொள்ளப்படும் தீவிர மறுசீரமைப்புகளின் ஊடாகவே அது சார்ந்த பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும். மாறாக பொய்யான தகவல்கள் மூலம் மின் விநியோகத் தடை பற்றிய நிலைமைகளைச் சரி செய்ய முடியாது."

– இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பொறியியலாளர் எம்.பி.எஸ்.சமரசேகர கடந்த ஆண்டு நவம்பரில் அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றை தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டு எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"மின் தடைக்கு முதலில் குரங்கின் மேல் குற்றச்சாட்டை முன்வைத்த தற்போதைய அரசு, பின்னர் அந்தக் குற்றச்சாட்டை முந்தைய அரசு மீது மாற்றியது.

ஆனால், உண்மையான பிரச்சினை என்ன? சூரிய மின்சக்தியின் மேம்பாடும், குறைந்த மின் விநியோக காலங்களை முகாமை செய்ய முடியாத பலவீனமான மின் வலையமைப்பின் இருப்பும்தான் காரணமாகும்.

பொய்யான தகவல்கள் மூலம் மின் விநியோகத் தடை பற்றிய நிலைமைகளைச் சரி செய்ய முடியாது. அவற்றைச் சரி செய்வதற்கான ஒரே வழி, மின்சக்தித் துறையை உள்ளடக்கிய அனைத்து துறைகளிலும் மேற்கொள்ளப்படும் தீவிர மறுசீரமைப்புகள்தான்.

உண்மையான மாற்றம் ஆரம்பமாகும் போது அது வெளிப்படைத் தன்மையுடன் இருக்க வேண்டும்." – என்றார்.

# ஆடைத் தொழிற்சாலை பஸ் மோதி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபச் சாவு!

## பரந்தனில் நேற்று இரவு சம்பவம்





(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் ஏ – 9 வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

பரந்தன், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கருணாரத்தினம் இந்திரன் என்பவரே சாவடைந்துள்ளார்.

வீதியில் நடந்து சென்றவரை ஆடைத் தொழிற்சாலை பஸ் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் பரந்தன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மின் துண்டிப்பால் ஏற்பட்ட நட்டம் குறித்து மதிப்பிடுகின்றது அரசு

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்



நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின் துண்டிப்பால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் மதிப்பீடுகளை முன்னெடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"மின்சக்தி அமைச்சும், இலங்கை மின்சார சபையும், மின்சார சபையின் பொறியியலாளர் சங்கமும் மின் வெட்டு தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளன. மின் கட்டமைப்பில் ஏற்பட்ட சமநிலையற்ற தன்மை தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றுக்கு நிரந்தர தீர்வை வழங்குவதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. குறுகிய கால நடவடிக்கைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மின் தடையால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் இதுவரையில் மின்சார சபை எவ்வித அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை.

நட்டம் தொடர்பில் மதிப்பீடுகளை முன்னெடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது." – என்றார்.

# வரக் கூடிய புதிய அரசமைப்பாக்க முயற்சியை தமிழ்த் தேசமாக ஒருமித்து எதிர் கொள்ளுதல்

## தமிழ் சிவில் சமூக அமையம் அறிக்கை மூலம் விளக்கம்

"வரக் கூடிய புதிய அரசமைப்பாக்க முயற்சியை தமிழ்த் தேசமாக ஒருமித்து எதிர் கொள்ளுதல்" தொடர்பில் தமிழ் சிவில் சமூக அமையம் அறிக்கை மூலம் விளக்கம் அளித்திருக்கின்றது.

இது தொடர்பில் தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப் பேச்சாளர் பொ.ந.சிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு தெரிந்தெடுக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதனை தமது நாடாளுமன்ற காலப்பகுதிக்கான வேலைத்திட்டங்களில் ஒன்றாகத் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்திருந்தமை அறிந்ததே. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினுடைய அரசமைப்புத் தீர்வு தொடர்பான கடந்த கால நிலைப்பாடுகளானவை ஒற்றையாட்சி அரசமைப்பிற்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்பதற்கான நம்பிக்கையைத் தமிழ் மக்களுக்கு வழங்கவில்லை என்பதே உண்மை.

நாடாளுமன்றத்தில் அரசமைப்பு நிர்ணய சபை மூலமாகவோ அல்லது நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமாகவோ அல்லது வேறு ஏதேனும் வடிவத்திலோ புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கான முயற்சி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் முன்மொழியப்படக் கூடிய நிலையில் புதிய அரசமைப்பாக்கல் முயற்சியை எவ்வாறு தமிழ்த் தேசமாக எதிர் கொள்ளுதல் என்பது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயமாக உள்ளது. அரசாங்கம் அரசமைப்பாக்க முயற்சியை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை நாம் காத்திருக்க வேண்டியதில்லை. இவ்விடயத்தில் நாம் தயார் நிலையில் இருத்தல் அவசியமானதாகும்.

கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் கணிசமான அளவில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கும் வாக்களித்திருந்தார்கள் என்பது வெளிப்படையான உண்மை. தமிழ் தேசியக் கட்சி அல்லாத ஒரு கட்சியானது வடக்கு, கிழக்கிலே குறிப்பிடத்தக்க அளவு ஆசனங்களை பெற்றிருந்தது வரலாற்றில் முதல் தடவையாக அமைந்திருந்ததையும் பல்வேறு தரப்பினர் கரிசனையுடன் அவதானித்துள்ளனர்.

அதேவேளை பொதுத்தேர்தலில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய முடிவுகளானவை தமிழ்த்தேசிய கருத்தியலை மக்கள் மறுதலிக்கவில்லை என்பதனை எடுத்தியம்புவதோடு, மாறாக தமிழ்த்தேசிய பரப்பில் இயங்கும் அரசியல் கட்சிகள் மீது அவர்களுக்குள்ள சலிப்பே கடந்த பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சிக்கான வாக்காக வெளிப்படுத்தப்பட்டிருந்தது என்பதனையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

எனவே தேர்தல் கால கூட்டுக்களுக்கு அப்பால் தமிழர் தேசம் முகங்கொடுக்கக் கூடிய சவால்களுக்கு ஒன்றாக தமிழ்த்தேசிய பரப்பிலுள்ள அரசியல் கட்சிகள் சேர்ந்து இயங்குவது என்பது முக்கியமானது. அந்தவகையிலே நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்றிருக்கக்கூடிய தமிழ்த்தேசியக் கட்சிகளானவை நாடாளுமன்றத்தூடாக முன்வைக்கப்படக் கூடிய அரசமைப்பாக்கல் முயற்சி தொடர்பாக கருத்தொருமிக்க ஒருமைப்பாடு ஒன்றை அடைய வேண்டும் என்பது தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பாகும்.

இத்தகைய ஒரு நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நா.உ. அவர்களும் தமிழரசுக்கட்சியின் உடைய நாடாளுமன்றக் குழுத்தலைவர் திரு. சிவஞானம் சிறீதரன் நா.உ. அவர்களும் எடுத்துக் கொண்டுள்ள அண்மைக்கால முயற்சியானது வரவேற்கப்பட வேண்டியதும், ஆதரவு வழங்கப்பட வேண்டியதுமான ஒரு முயற்சியும் ஆகும். இதற்காதரவாக திரு. செல்வம் அடைக்கலநாதன் நா.உ. அவர்களும் பொது வெளியில் கருத்து வெளியிட்டுள்ளமையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முயற்சியில் பங்கெடுக்கத் தயாராக உள்ளமையும் வரவேற்கப்பட வேண்டியதாகும். இம்முயற்சியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இணைந்து கொள்ள வேண்டும் என நாம் பகிரங்கமாக அழைப்பு விடுகின்றோம்.

ஏலவே தமிழ் சிவில் சமூக அமையமும் அங்கம் வகித்து தமிழ் மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்டிருந்த தமிழ் மக்கள் பேரவையினுடைய அரசமைப்பு யோசனைகளின் அடிப்படையிலே குறித்த அரசமைப்பாக்கல் முயற்சிக்கான பொதுப்புள்ளியை அடைவதற்கான பேச்சுவார்த்தையை தொடங்கலாம் என்பது திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எடுத்துள்ள நிலைப்பாடாகும்.

தமிழ் மக்கள் பேரவையிலே தமிழரசுக்கட்சி பங்கு பற்றாது விட்டாலும் தமிழரசுக்கட்சியினுடைய வரலாற்று ரீதியான நிலைப்பாடுகளில் இருந்து தமிழ்மக்கள் பேரவையின் முன்மொழிவுகளானவை வேறுபாடானவை அல்ல என்பது தமிழ் சிவில் சமூக அமையத்தின் எண்ணமாகும்.

இருப்பினும் குறித்த முயற்சியிலே தமிழரசுக்கட்சி பங்குபற்றவில்லை என்ற விடயம் முன்வைக்கப்படுவதனால் வெறுமனே தமிழ்மக்கள் பேரவையினுடைய யோசனைகள் மாத்திரமன்றி காலத்திற்கு காலம் தமிழரசுக் கட்சி உட்பட தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளால் முன்மொழியப்பட்ட நகல் வரைவுகளை இந்தப் பொதுப்புள்ளியை அடைவதற்கான செயன்முறையில் உள்ளீடாகப் பயன்படுத்தலாம் என்பது தமிழ் சிவில் சமூக அமையத்தின் நிலைப்பாடாகும்.

ஒரு குறிப்பிட்ட அமைப்பின் பெயர் தாங்கி வரக்கூடிய யோசனைகளை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என யோசிக்கக் கூடாது என்பது தமிழ் சிவில் சமூக அமையத்தினுடைய வினயமான வேண்டுகோள் ஆகும்.

தமிழ் மக்களுக்கு அவசியமான தீர்வு என்ன என்பது தொடர்பான ஒரு ஒருமித்த குரலில் தமிழ் அரசியல் கட்சிகள் நாடாளுமன்றத்தில் நிலைப்பாடு எடுத்தல் என்பதை அடிப்படையாகக் கொண்டு பொது உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்பதே தமிழ் சிவில் சமூக அமையத்தினுடைய வேண்டுகோள் ஆகும்.

ஆனால் இந்தச் செயன்முறையிலே 2015 இற்கும் 2019 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது உருவாக்கப்பட்ட இடைக்கால அறிக்கையோ அந்தச் செயன்முறையில் நிபுணர்கள் குழுவால் உருவாக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலோ குறித்த பேச்சுவார்த்தைகள் அமைய முடியாது என்பது தமிழ் சிவில் சமூக அமையத்தினுடைய நிலைப்பாடாகும். தென்னிலங்கை அரசமைப்பு சட்டத்தரணிகளும் புலமையாளர்களும் குறித்த 2015 - 2019 செயன்முறையில் உருவாக்கப்பட்ட இடைக்கால அறிக்கையும் நிபுணர் குழுவால் உருவாக்கப்பட்ட நகல் வரைவும் 13ஆம் திருத்தத்தை விட குறைவான அதிகாரப்பரவலைத் தான் கொண்டிருக்கின்றன என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றனர். ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்ட ஏக்கிய இராச்சிய என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அந்த முன்மொழிவுகளானவை இந்தப் பொது நிலைப்பாட்டை அடைவதற்

தொடர்ச்சி▼

# வரக் கூடிய புதிய அரசமைப்பாக்க முயற்சியை தமிழ்த் தேசமாக ஒருமித்து எதிர் கொள்ளுதல்

## தமிழ் சிவில் சமூக அமையம் அறிக்கை மூலம் விளக்கம்

தொடர்ச்சி▲

கான ஒரு தேடலில் ஓர் ஆவணமாகக் கொள்ளப்பட வேண்டிய அவசியமே இல்லை என்பது தமிழ் சிவில் சமூக அமையத்தின் நிலைப்பாடாகும்.

எட்டப்படுகின்ற பொது நிலைப்பாடுகளானது திம்புப் கோட்பாடுகளின் அடிப்படையிலும் தமிழருடைய தேசம், சுயநிர்ணயம், இறைமை மற்றும் வடக்குக் கிழக்கு தாயகமானது அவர்களுடைய ஆளுகைக்கான நிலப்பரப்பு என்ற விடயங்களில் விட்டுக்கொடுக்காத ஒரு பொதுவான நிலைப்பாடாக அமைய வேண்டும் என்பது தமிழ் சிவில் தமிழ் சிவில் சமூக அமையத்தினுடைய நிலைப்பாடாகும்.

எனவே குறித்த வரையறைகளுக்கு உட்பட்ட எந்த நகல் வரைவையும் குறித்த தேடலில் உள்ளீட்டு ஆவணங்களாக பயன்படுத்திக் கொள்வதில் தடை எதுவும் இருக்க முடியாது. மாறாக இந்த வரையறையை வெளிப்படையாக மீறியும், அதனை ஏற்றுக்கொள்ளாததுமான ஆவணங்களை குறித்த செயன்முறையில் பயன்படுத்துவதென்பது ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் திரு. சிறிதரன் அவர்களால் எடுக்கப்பட்டுள்ள இந்த முயற்சியினை குழப்புவதற்கு பல்வேறு சக்திகள் முயற்சிக்கின்றன என்பது பொதுவாக நோக்குகின்ற போது அறியக்கூடியதாக உள்ளது.

தமிழ் மக்கள் ஒருமித்த ஒரு நிலைப்பாட்டை எடுக்கக் கூடாது என்பதிலும் குறிப்பாக அரசமைப்பு தீர்வு சார்ந்து தெளிவான தமிழ் தேசத்தின் வரலாற்றில் விட்டுக்கொடுக்காத ஒரு நிலைப்பாட்டை முன்வைக்க கடந்த 15 வருடங்களில் தவறிய தரப்புகள் இந்த முயற்சியை குழப்ப மக்களால் தற்போது அவர்கள் நிராகரிக்கப்பட்டுள்ள போதும் முயற்சிக்கின்றமை எமக்கு மிகுந்த மனவருத்தத்தை தருகின்றது.

இவ்வாறான குழப்பகரமான சக்திகளை தமிழ் மக்கள் அடையாளம் கண்டு ஒருமித்த பொதுவான நிலைப்பாடு ஒன்றை யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் முதல் தடவையாக 15 வருடங்களுக்கு பிறகு எய்துவதற்கான வாய்ப்பை நாம் இழக்காமல் பொதுத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் குறித்த முயற்சியானது வெற்றி பெற நாம் எல்லோரும் சேர்ந்து முயற்சிப்பது அவசியம் என்ற அடிப்படையில் நாம் அனைவரையும் இந்த முயற்சியில் பங்கெடுக்குமாறும் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பாக இந்த விடயத்தை வெறுமனே அரசியல் கட்சிகளிடம் மட்டும் விட்டு விடாமல் தமிழ் மக்களும் நேரடி பங்குபற்றுனர்களாக இந்தச் செய்முறையில் இணைந்து கொள்வதானது இந்தச் செயன்முறை மக்களின் நலன் சார்ந்து இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு உதவும்.

மேலும் குறித்த முயற்சி மேலே சொல்லப்பட்ட வரையறைக்கு அமைய தொடர்ந்து பிரயாணிக்குமிடத்து குறித்த முயற்சிக்கு தமிழ் சிவில் சமூக அமையம் தனது பூரணமான ஒத்துழைப்பையும், உள்ளீட்டையும், பங்களிப்பையும் வழங்கும் என அறியத்தருகின்றோம். – என்று உள்ளது.

### தையிட்டி விகாரை தொடர்பில்

# அமைச்சர் மௌனம் சாதிக்கின்றமையால் அரச அதிபரும் மௌனம் பேணுகின்றாராம்



(ந.லோகதயாளன்)

தையிட்டி விகாரை தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான அமைச்சர் எந்தக் கூற்றையும் கூறாதமையால் நானும் மௌனம் காக்க நேரிட்டது என மாவட்ட பதில் அரச அதிபரான ம.பிரதீபன் தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது விகாரை தொடர்பில் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமே தங்களுக்கு கடிதம் எழுதியது தொடர்பில் ஏன் பிரஸ்தாபிக்கவில்லை எனக் கேட்கப்பட்ட வினாவிற்கே மேற்கண்டவாறு அவர் பதிலளித்தார்.

இது தொடர்பில் மாவட்ட பதில் அரச அதிபரான ம.பிரதீபன் மேலும் பதிலளிக்கையில் –

தையிட்டி விகாரை தொடர்பில் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி எழுதிய கடிதம் எனக்கு அனுப்பி வைத்திருந்த அதே நேரம் பிரதேச செயலாளருக்கு மட்டுமன்றி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான அமைச்சருக்கும் பிரதியிடப்பட்டிருந்தது. ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் இருப்பதனால் அவர் பிரஸ்தாபிக்ககூடும் என நான் எதிர்பார்த்தேன். – எனப் பதிலளித்தார்.

# மருத்துவக் கழிவு எரியூட்டி விடயம் கோம்பயன்மணல் மக்கள் எதிர்ப்பு!






யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ எரியூட்டியால் தமக்கு பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிவித்து அப்பகுதி மக்கள் நேற்றைய தினம் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மருத்துவ எரியூட்டியில் மருத்துவக் கழிவுகள் எரிக்கப்படுவதால் அதில் இருந்து கிளம்பும் புகை காரணமாக சுவாசப் பிரச்சினை, துர்நாற்றம் என்பன ஏற்படுவதால் அயலில் வசிக்கும் தாம் பாதிக்கப்படுகின்றனர் என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்

இந்நியில் போராட்டக்காரர்களை சந்தித்த தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திர மூர்த்தி இந்த விடயம் தொடர்பில் உரிய தரப்புக்களுடன் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பார் எனத் தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவ கழிவுகளை எரியூட்டுவதில் கடந்த காலங்களில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்திருந்தன. எரியூட்டியை அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்வதில் இழுபறி காணப்பட்ட நிலையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 40 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பில் இந்தப் பகுதியில் எரியூட்டி கடந்த வருடம் உருவாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.



# நிலாவெளியில் வலம்புரிகளுடன் மூவர் கைது!

(முஹம்மட் றிஸ்னாத்)

திருகோணமலை – நிலாவெளி பிரதேசத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் நாலரைக் கோடி ரூபாவிற்கு விற்பனை செய்யத் தயார் செய்யப்பட்ட 4 வலம்புரிகளுடன் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர் என

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ், அநுராதபுரம் மற்றும் திருகோணமலை உதவிப் பணிப்பாளர் தென்ன



கோன், ஹொரவ்பொத்தானை தேசிய பூங்காவின் அதிகாரிகள் மற்றும் குச்சவெளி பிரதேச பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் ஆகியோர் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்கள் நேற்று திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் ஒருவருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் வீதம் சரீரப் பிணையில் செல்வதற்கு நீதிவான் கட்டளையிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா மற்றும் இறக்க கண்டி பகுதிகளை சேர்ந்த 33,39, 45 வயதுடையவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

மேலும் இவர்களை மார்ச் 19 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதிவான் கட்டளையிட்டுள்ளார்.

# தமிழ்த் தேசத்தின் மேன்மைக்காக மகத்தான பங்களிப்பு செய்த பாரதி

## நீதியரசர் விக்னேஸ்வரன் இரங்கல்





பல முன்னணி பத்திரிகைகளின் ஆசிரியராகவும் ஊடகவியலாளராகவும் பெரிதும் மதிக்கப்படும் வகையில் எம்மத்தியில் வாழ்ந்த பாரதி ராஜநாயகம் திடீரென்று மறைந்த செய்தி என்னை மிகுந்த வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறு யாழ் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார். ஊடகவியலாளர் பாரதியின் மறைவு குறித்துத் தாம் வெளியிட்ட இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார். அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னர் உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்த காலம் முதல் அவரை அறிவேன். அவருடன் பழகிய 5 நிமிடங்களிலேயே அவர் கண்ணியம்மிக்க ஒரு நிறைகுடம் என்பதை எவரும் இலகுவில் புரிந்து கொண்டுவிட முடியும். ஊடக துறைக்கு அவர் ஆற்றிய மகத்தான சேவைகள் மற்றும் பங்களிப்புக்களை நான் நன்கு அறிவேன். ஆனால், அதற்கும் அப்பால் தமிழ் மக்களின் அரசியல் சமூக , பொருளாதார உரிமைகளுக்காக அவர் ஆற்றிய சேவைகள் மற்றும் அர்பணிப்புக்கள் ஏராளம். தமிழ் தேசம் பற்றிய தெளிவான உணர்வும் அதனை கட்டியெழுப்புவதற்கான சிந்தனையும் அவர் மனதில் ஆழமாக பதிந்திருந்தமையை நான் அறிவேன்.

தமிழ் தேசத்துக்கான அவரின் பங்களிப்புகள் பற்றி நான் அவரின் நண்பர்களிடம் இருந்து தான் அறிந்துகொண்டேன். பாரதி ஒருபோதும் தற்பெருமை பேசியவர் அல்லர். எத்தனையோ இடர்களின் மத்தியில் அவர் வாழ்ந்துவந்தபோதிலும் ஒருபோதும் தனிப்பட்ட எந்த உதவியையும் அவர் என்னிடம் கேட்டதில்லை. அவர்தான் எனக்கு உதவியிருக்கின்றார்.

நான் அரசியலுக்குள் நுழைந்த கடந்த 12 வருட காலத்தில் ஏராளமான தடவைகள் அவரைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்தும் அவருடன் கலந்துரையாடியமை எனக்கு நினைவுக்கு வருகின்றன. தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் அரசியல் பற்றி மிகவும் தெளிவான நிலைப்பாடுகளை கொண்டிருந்தார். அவரின் ஆலோசனைகள் எனக்கு உதவியாக இருந்திருக்கின்றன.

பாரதி மட்டுமன்றி அவரின் குடும்பம் தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக மகத்தான பங்களிப்பை செய்திருக்கின்றது.

தமிழ் ஊடகத்துறைக்கும், அரசியலுக்கும், சமூகத்துக்கும் பாரதி வழிகாட்ட வேண்டியவை இன்னமும் ஏராளம் இருக்கின்றபோது இத்தனை விரைவாக இறைவன் அவரை தன்பக்கம் வரவழைத்துக்கொண்டமை எமது துரதிஷ்டமே.

பாரதியின் மறைவினால் துயருறும் மனைவி, மகன், தங்கை, உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

# பத்திரிகையாளர் பாரதியின் மறைவு தமிழ் ஊடகத்துறைக்குப் பேரிழப்பு

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அனுதாபம்

மூத்த பத்திரிகையாளர் இராசநாயகம் பாரதியின் மறைவு தமிழ் ஊடகத்துறைக்குப் பேரிழப்பாகும். தமிழ் தேசியத்தின்பால் தீவிர ஈடுபாடு கொண்டு செயற்பட்ட போராளியாகவே பாரதி திகழ்ந்திருந்தார். தமிழ் கூறும் நல்லுலகத்தில் பெரும் இடைவெளியை பாரதியின் இழப்பு ஏற்படுத்தியிருக்கின்றது என்று தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அனுதாபம் தெரிவித்துள்ளது.

ஒன்றியம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஞாயிறு தினக்குரல், தினக்குரல் இணையம் ஆகியவற்றின் முன்னாள் பிரதம ஆசிரியரும், வீரகேசரி வடபிராந்திய பதிப்பின் ஆசிரியருமான மூத்த பத்திரிகையாளர் இராசநாயகம் பாரதியின் திடீர் மறைவு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழ் ஊடகத்துறையின் வளர்ச்சிக்காகவும், தமிழ்ப் பேசும் ஊடகவிலயாளர்களின் உரிமைக்காகவும் தமிழ் தேசியத்தின் குரலாகவும் செயற்பட்டு வந்த பாரதியின் மறைவானது தமிழ் ஊடகத்துறைத் தளத்தில் பேரிடைவெளியை ஏற்படுத்தியிருக்கின்றது.

1980களில் ஊடகத்துறைக்குள் காலடி எடுத்து வைத்த பாரதி கடந்த 35 வருட காலங்களுக்கும்மேலாக பத்திரிகைதுறையில் பணியாற்றியுள்ளார். யுத்தகாலத்தில் பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தமிழ்த் தேசியத்தின்பால் நின்று செயற்பட்ட போராளியாகவே அவர் அடையாளப் படுத்தப்படுகின்றார்.

தமிழ் ஊடகத்துறையானது பெரும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கிய காலத்தில் ஊடகத்துறையின் சுதந்திரத்துக்காக அவர் துணிந்து செயற்பட்டிருந்தார். தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான பாரதி ஒன்றியத்தின் தலைவராகவும் செயலாளராகவும் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். ஒன்றியத்தின் வளர்ச்சியில் அக்கறை காண்பித்து வந்த பாரதி தமிழ் ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் தீவிரமாக செயற்பட்டவராவார்.

இறுதி யுத்தகாலத்தில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தலை எதிர்நோக்கியபோது ஏனைய ஊடக அமைப்புக்களுடன் இணைந்து ஒன்றியமும் செயற்படுவதற்கான நடவடிக்கைகளை அவர் எடுத்திருந்தார். ஐந்து ஊடக அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்குப் பூரண ஒத்துழைப்புக்களையும் அவர் வழங்கியிருந்தார். சகோதர ஊடக அமைப்பின் பிரதிநிதிகளுடனும் அவர் நல்லுறவை பேணியமையுடன் தமிழ் ஊடகவியலாளரின் நலன்கள் தொடர்பில் தீவிர அக்கறையைச் செலுத்தி வந்தவராவார்.

தமிழ் ஊடகத்துறைப் பரப்பில் இளம் பத்திரிகையாளர்களை பயிற்றுவிப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை அவர் எடுத்திருந்தார். யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கை நிறுவகத்தில் அவர் விரிவுரையாளராகவும் பணியாற்றியிருந்தார். பல்வேறு ஊடக கற்கை நிறுவனங்களிலும் அவர் கற்பித்திருந்தார்.

இவ்வாறு தமிழ் ஊடகத்துறையின் வளர்ச்சிக்காகவும் சுதந்திரத்துக்காகவும் தமிழ் தேசியத்துக்காவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்திருந்த பாரதியின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். - என்று உள்ளது.



# நிவித்திகலை தமிழ்ப் பாடசாலையின் காணியைப் பாதுகாக்கப் போராட்டம்

(எஸ்.இரவீந்திரன்)

நிவித்திகலை கல்வி வலயத்தின் கீழியங்கும் எந்தான மீனாட்சியம்மாள் தமிழ் வித்தியாலய காணியை பிரதேச மக்கள் சட்டவிரோதமாக கைப்பற்றி வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பாடசாலையின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை முதல் மாலை வரை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர் “எமது காணிக்கு உத்தரவாதம் தாருங்கள்!“ – என்று கோசம் எழுப்பினர். காணி பறிபோவதைத் தடுக்க பாடசாலை அதிபர் உரிய நடவடிக்கை எடுக்க வில்லை என்றும் தெரிவித்தனர்.



இது குறித்து சபரகமுவ மாகாண ஆளுநர், மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்விக் காரியாலயம், வந்தான் பொலிஸ் நிலையம் உள்ளிட்ட பல நிறுவனங்களுக்கு அறிவித்தமையைத் தொடர்ந்து நிவித்திகலை வலய கல்விக் காரியாலய அதிகாரிகள் அங்கு சென்று நிலைமையை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என அறிவித்தனர். அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

# இரண்டு கிலோ கஞ்சா வத்திருந்த இளைஞர் வவுனியாவில் சிக்கினார்

(கி.வசந்தன்)


வவுனியா, தோணிக்கல் பகுதியில் 2 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சமந்த விஜசேகரவின் ஆலோசனையில், வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிநடத்தலில், வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையில் சப் இன்ஸ்பெக்டர் சாரங்க ராஜகுரு, பொலிஸ் சார்ஜன்ட்டுகளான திசாநாயக்க (37348), ரன்வெல (61518), பொலிஸ் கான்ஸ்டபிள்களான சிந்தக (78448), விதுசன் (91800), சாரதியான திஸாநாயக்க (18129) ஆகியோர் தலைமையிலான பொலிஸார் விசேட நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.



இதன்போது வவுனியா, தோணிக்கல் பகுதியில் 34 வயதுடைய இளைஞர் ஒருவர் 2 கிலோ கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து கஞ்சா மீட்கப்பட்டதுடன் இளைஞரும் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின் அவரை சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மில்லியன் கணக்கான மக்கள் வாழ்க்கையை மாற்றுவதற்கு செயற்கை நுண்ணறிவு உதவும்



## பிரதமர் மோடி உரை

மில்லியன் கணக்கான மக்கள் வாழ்க்கையை மாற்றுவதற்கு செயற்கை நுண்ணறிவு உதவும் என்று இந்திய பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு மாநாடு பிரான்ஸில் நடைபெற்று வருகிறது. இரண்டு நாள் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்திய பிரதமர் மோடி கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் இந்தியாவில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.

நேற்று பிற்பகல் செயற்கை நுண்ணறிவு மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து உரையாற்றிய போது,

"செயற்கை நுண்ணறிவு ஏற்கனவே நமது பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் நமது சமூகத்தை மறுவடிவமைத்து வருகிறது. இந்த நூற்றாண்டில் மனித குலத்திற்கான Code-I AI எழுதுகிறது.

ஒரு எளிய உதாரணத்துடன் ஆரம்பிக்கிறேன். உங்கள் மருத்துவ அறிக்கையை ஒரு யுஐ செயலியில் பதிவேற்றினால், அது உங்கள் ஆரோக்கியம் தொடர்பான அனைத்து தகவலையும் எளிய மொழியில் விளக்க முடியும்.

AI முன்னெப்போதும் இல்லாத அளவு மற்றும் வேகத்தில் வளர்ந்து வருகிறது. மேலும் மாற்றியமைக்கப்பட்டு இன்னும் வேகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் open source systems-ஐ நாம் உருவாக்க வேண்டும். ஒரு தரப்பு என்று இல்லாமல் தரமான தரவு மையங்களை உருவாக்க வேண்டும். சைபர் பாதுகாப்பு, தவறான தகவல்கள் மற்றும் டீப்பேக்ஸ் குறித்து நாம் கவனிக்க வேண்டும்.

வேலை இழப்பு ஏ.ஐ-யின் மிகப்பெரிய அச்சுறுத்தல் என பார்க்கப்படுகிறது. ஆனால் தொழில்நுட்பத்தால் வேலை மறைந்து போவதில்லை. அதன் தன்மை மாறுகிறது என்பதை நமது வரலாறு காட்டியுள்ளது. ஏ.ஐ. தொழில்நுட்பத்தறிக்கு ஏற்றவாறு நமது திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சுகாதாரம், கல்வி, விவசாயம் மற்றும் பலவற்றை மேம்படுத்துவதன் மூலம் மில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கையை மாற்ற யுஐ உதவும்.

நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான பயணத்தை எளிதாகவும் வேகமாகவும் மாறும் ஒரு உலகத்தை உருவாக்க இது உதவும். இதைச் செய்ய, நாம் வளங்களையும் திறமைகளையும் ஒன்றிணைக்க வேண்டும்." என்றார்.

# பிரான்ஸில் மோடிக்கு உற்சாக வரவேற்பு!



பிரான்ஸ் சென்றுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அந்நாட்டு ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் மற்றும் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜேடி வேன்ஸ் ஆகியோரை சந்தித்தார்.

3 நாள் அரசு முறை பயணமாக பிரான்ஸ் சென்ற பிரதமர் மோடிக்கு பாரிஸ் விமான நிலையத்தில் வைத்து இந்திய மக்களால் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது .

இதனைத் தொடர்ந்து பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரோனைச் சந்தித்துக் கலந்துரையாடிய பிரதமர் மோடி, மேக்ரோன் வழங்கிய விருந்தில் கலந்து கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முருக பெருமானை போற்றுவோம் விஜய் தைப்பூசத் திருநாள் வாழ்த்து



உலகெங்கும் வாழும் தமிழர்களின் தனிப்பெரும் கடவுள் முருகப் பெருமானைப் போற்றுவோம். அனைவருக்கும் தைப்பூசத் திருநாள் வாழ்த்துகள் என்று த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

தை மாதத்தில் வருகிற பூசத் திருநாள் தைப்பூச விழாவாக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்தநாளில், தைப்பூச திருவிழாவை முன்னிட்டு முருகனின் அறுபடை வீடுகளில் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, பழனியில் பாதயாத்திரையாக சென்ற ஏராளமான பக்தர்கள் தங்களது வேண்டுதலை நிறைவேற்றி வருகின்றனர். பழனியில் பக்தர்கள் கூட்டம் அதிகமானதை அடுத்து, நேற்று சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், பக்தர்களுக்கு தேவையான அன்னதானம், தண்ணீர் வசதி, கழிவறை வசதி, போக்குவரத்து வசதிகளையும் தமிழக அரசு சிறப்பாக செய்து கொடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தைப்பூசம் திருநாளை முன்னிட்டு பல அரசியல் தலைவர்களும் தங்களது சமூக வலைதளத்தில் வாழ்த்துக்களை தெரிவித்தனர். அந்த வகையில் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் தனது எக்ஸ் பக்கத்தில் கூறிய வாழ்த்து செய்தியில்,

"தனித்துயர்ந்த குன்றுகள் தோறும் வீற்றிருக்கும் தமிழ்நிலக் கடவுள் உலகெங்கும் வாழும் தமிழர்களின் தனிப்பெரும் கடவுள் முருகப் பெருமானைப் போற்றுவோம். அனைவருக்கும் தைப்பூசத் திருநாள் வாழ்த்துகள்" எனப் பதவிட்டுள்ளார்.




# ஜோர்தான் மன்னருடன் டொனால்ட் ட்ரம்ப் சந்திப்பு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு ஜோர்தான் மன்னர் அப்துல்லாவுக்கும் இடையில் வெள்ளை மாளிகையில் நேற்று சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காசாவைக் கைப்பற்றி பாலஸ்தீனர்களை மீள்குடியேற்றம் செய்யும் தமது திட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி மேற்கொண்ட அழைப்பை ஜோர்தான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் நிராகரித்துள்ளன.

இதனையடுத்து, தமது திட்டத்துக்கு ஒத்துழைக்கவில்லையாயின் அந்த நாடுகளுக்கான உதவியை நிறுத்த நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள நிலையில், ஜோர்தான் மன்னர் அவரை சந்திக்கவுள்ளார்.

இந்த சந்திப்புக்கு முன்னதாக ஜோர்தான் மன்னர் அப்துல்லா, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆலோசகர்கள் சிலரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

# ஹமாஸ் பணயக்கைதிகளை தொடர்ந்தும் விடுவிப்பதற்கு இஸ்ரேல் நடவடிக்கை!

காசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக்கைதிகளை திருப்பி அனுப்புவதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுப்பதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

முன்னதாக இஸ்ரேலிய பணயக்கைதிகளின் விடுதலையை ஒத்திவைப்பதாக ஹமாஸ் அறிவித்திருந்தது.



போர் நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறியதாக குற்றஞ்சாட்டியே ஹமாஸ் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

எனினும், ஹமாஸ் பணயக்கைதிகளை தொடர்ந்தும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இஸ்ரேலிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியரின் கத்திக் குத்துக்கு இலக்காகி மாணவி உயிரிழப்பு



தென் கொரியாவில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் எட்டு வயது சிறுமியைக் கத்தியால் குத்தி கொலை செய்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையில் உள்ள கட்டடமொன்றின் இரண்டாவது மாடியில் கத்தியால் குத்தப்பட்ட காயங்களுடன் சிறுமி ஒருவரை மீட்டுள்ளனர்.

சிகிச்சைகளுக்காக சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்த போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் 40 வயதுடைய பெண் ஆசிரியை, ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அந்த ஆசிரியர் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்த விசாரணைகளை விரைவுபடுத்த வேண்டும் என தென்கொரிய இடைக்கால ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அதிகாரிகளை வலியுறுத்தினார்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.







# வடக்கின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநருடன் ஜப்பானியத் தூதுவர் பேச்சு

வடக்கு மாகாணத்தின் தேவைப்பாடுகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுடன் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் இஷோமார்ரா அகியோ கலந்துரையாடல் நடத்தினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

தற்போதைய அரசின் காலத்தில் அபிவிருத்திப் பணிகளை வடக்கில் முன்னெடுப்பதற்கான சாதகமாக சமிஞ்சை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டிய ஆளுநர், கடந்த காலத்தில் ஜப்பானிய அரசு ஜெய்க்கா திட்டத்தின் ஊடாக மேற்கொண்ட உதவிகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்தார்.

வடக்கின் சுற்றுலாத்துறையை மேம்படுத்த எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர, போக்குவரத்து வசதிகள், வீதிகள் அதற்குப் பிரதான சவாலாக இருப்பதாகவும் தூதுவருக்குத் தெரியப்படுத்தினார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பயண நேரம் அதிகமாக இருப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர் இது சுற்றுலாத் துறையை வடக்கில் மேம்படுத்துவதில் சில தடங்கல்களை ஏற்படுத்துகின்றது எனவும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாயையும், கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டையையும் இணைக்கும் பாலம் அமைக்கப்பட்டால் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு அது பெரிதும் உதவியாக அமையும் எனவும் ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

போருக்கு முன்னர் இயங்கிய பல தொழிற்சாலைகள் மீளவும் இயக்கப்படாமையால் வேலைவாய்ப்பு வடக்கில் சவாலாக இருக்கின்றது என்பதையும் ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

விவசாய மற்றும் மீன்பிடியில் வடக்கில் உள்ள தேவைப்பாடுகள் தொடர்பிலும் தூதுவருக்கு ஆளுநர் தெரியப்படுத்தினார்.

புதிய அரசின் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாகவும் தூதுவர் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் வடக்கு மாகாணத்துக்குக் கிடைக்கப் பெறும் ஏனைய நாடுகளின், நிறுவனங்களின் உதவிகள் தொடர்பிலும் ஆளுநரிடம், தூதுவர் கேள்விகளை எழுப்பினார்.

ஜப்பான் தொடர்ந்தும் வடக்கு மக்களுக்கு உதவிகளை வழங்க வேண்டும் என எதிர்பார்ப்பதாக ஆளுநர் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜப்பானியத் தூதுவருடனான சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், ஆளுநரின் இணைப்புச் செயலாளர் எந்திரி அ.எ.சு.ராஜேந்திரா ஆகியோரும் கலந்துகொண்டனர்.











# இன்றைய ராசி பலன்கள் - 12.02.2025

## மேஷம்

இன்று நீங்கள் செய்யும் எந்தச் செயலிலும் உணர்ச்சி வசப்பட வேண்டாம். நிதானமாகச் செயல்படுவதன் மூலம் நீங்கள் எதிர்மறை விளைவுகளைத் தவிர்க்கலாம். இன்று நீங்கள் வெளியிடங்களுக்குச் செல்வதன் மூலம் மனம் அமைதியடையும்.

இன்று தொழிலில் முன்னேற்றத்துக்கான வாய்ப்பு இல்லை. பணியில் சுமை அதிகமாக இருக்கும். பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ளவும்.

உங்கள் மனநிலையில் ஏற்படும் மாறுபாடு காரணமாக உங்கள் துணையிடம் மகிழ்ச்சியை வெளிப்படுத்த மாட்டீர்கள். உங்கள் துணையுடன் யதார்த்தமாகவும் சந்தோஷமாகவும் இருப்பது நல்லது.

செலவுகள் சற்று அதிகமாகக் காணப்படும். பணத்தை சிக்கனமாகக் கையாளவும்.

## ரிஷபம்

சூழ்நிலைக்குத் தக்கவாறு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். எந்த ஒரு விஷயத்தையும் பக்குவமாக அணுகுவதன் மூலம் வேறுபாடுகளைத் தவிர்க்கலாம்.

பணியில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணிச்சுமை அதிகமாகவும் கவலை தருவதாகவும் இருக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல்கள் இருக்கும். அதனால் உங்கள் மகிழ்ச்சி பாதிக்கப்படலாம்.

நிதிநிலையில் அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும். நிதிசம்பந்தமான விஷயங்களை கவனமாகக் கையாள வேண்டும்.

கண்களில் ஏற்படும் எரிச்சல் பாதிப்புகளை உண்டாக்கும் என்பதால் அதன் தீவிரத்தை உணர்ந்து கவனமாக இருக்க வேண்டும்.

## மிதுனம்

இன்று உங்களுக்கு மிகவும் முன்னேற்றமான நாளாக அமையும். வாழ்க்கையின் யதார்த்தத்தை உணர்ந்து புதிய அனுபவங்களின் மூலம் நீங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படும் நாள்.

உங்கள் பணி மற்றும் தொழிலில் முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களது செயல்திறனில் திருப்திகரமான நிலை இருக்கும்.

இன்று கணவன் மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நல்ல புரிந்துணர்வுடன் இருப்பீர்கள். இனிமையான விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்றைய நாள் உங்களுக்கு இலாபகரமான நாளாக அமையும். பணத்தை உபயோகமான விஷயத்துக்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று நீங்கள் தன்னம்பிக்கையுடனும் அமைதியுடனும் காணப்படுவீர்கள்.

## கடகம்

இன்று முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும் நாள். ஊக்கம் மற்றும் உற்சாகத்துடன் காணப்பட்டு உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள் அனைத்து விதத்திலும் இன்று வளமான நாள்.

புதிய வாய்ப்புகள் அமைந்து வளர்ச்சிக்கு வழி வகுக்கும். பணி மற்றும் தொழில் மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் திருப்தி அளிக்கத் தக்க வகையிலும் காணப்படும்.

உங்கள் வாழ்க்கைத் துணையுடன் மகிழ்ச்சியாக வெளியே செல்வீர்கள். சந்தோஷத்தை அனுபவிக்கும் நாளாக அமையும்.

வருமானம் அதிகரிப்பதற்கான சாத்தியம் உளளது. நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படுவீர்கள்.

## சிம்மம்

இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கான சூழ்நிலை காணப்படுகிறது. தேவையற்ற விஷயங்கள் சிந்திப்பதை தவிர்க்கவும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

வேலையில் கூடுதல் கவனம் செலுத்தவும். பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று எளிதில் உணர்ச்சி வசப்படும் நாளாக இருப்பதால் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் நட்புறவுடன் நடந்து கொள்ள முயற்சி செய்யவும்.

கவனச் சிதைவால் பண இழப்புகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. தேவையற்ற செலவுகள் செய்ய நேரிடும். எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

மன அழுத்தத்தின் காரணமாகத் தலைவலி ஏற்படலாம்.

## கன்னி

இன்று உங்கள் தன்னம்பிக்கையும் உற்சாகமும் குறைந்து காணப்படும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பணிச் சுமை அதிகமாக இருக்கும். தவறுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் பணிகளை திட்டமிட்டுச் செய்ய வேண்டும்.

உங்கள் வாழ்க்கை துணையாரால் புறக்கணிக்கப்படுவதாக உணர்வீர்கள். பரஸ்பர உரையாடல் மற்றும் புரிந்துணர்வு மூலம் அதை தீர்க்கலாம்.

இன்று பண பரிவர்த்தனையில் சற்று சிரமங்கள் ஏற்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

தேவையற்ற கவலைகளின் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்பு காணப்படுகின்றது ஆரோக்கியமாக இருப்பதற்கு மனதை நிலையாக வைத்திருங்கள்.

## துலாம்

இன்று சந்தோஷமான சூழ்நிலை காணப்படும். நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்ற உறுதியுடன் இருப்பீர்கள். விரைவான முடிவு எடுப்பதற்கான அநுகூலமான மனநிலையுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணியை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் உணர்வுகளைச் சக பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்வீர்கள். விருந்துகளில் கலந்து கொள்வீர்கள்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் விழாவைப்பற்றி உங்கள் துணையாருடன் கலந்தாலோசிப்பீர்கள். அதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்கள் சேமிப்புகளை அதிகரித்துக் கொள்ளும் நல்ல வாய்ப்பு இருக்கின்றது. உங்கள் நெருக்கமானவர்களுடைய விருந்தில் கலந்து கொள்ள பணத்தைச் செலவிடுவீர்கள்.

## விருச்சிகம்

இன்று எளிதில் வெற்றி கிடைக்க சாத்தியம் உள்ளது. உங்கள் திறமையான தகவல் தொடர்பின் மூலம் மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். உங்கள் அணுகுமுறை வெற்றிச் சிகரங்களைத் தொட உங்களுக்கு உதவும்.

இன்று சவாலான பணிகளை எளிதில் எதிர்கொள்வீர்கள். உங்கள் பணிகளை எளிதில் விரைந்து முடிப்பீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையாருடன் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் நட்பான அணுகுமுறை அவருக்கு திருப்திகரமானதாக இருக்கும்.

இன்று கையிருப்பு பணத்தைக் கொண்டு வசதியாக இருப்பீர்கள். உங்கள் பணத்தை பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.02.2025




இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். இலக்கில் வெற்றி காண்பதைக் கடினமாக உணர்வீர்கள். மன அழுத்தத்தை போக்க யோகா அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும் நாள். அதிக வேலை காரணமாக அதை முடிப்பதில் சிரமும் எரிச்சலும் இருக்கும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் வாழ்க்கைத் துணையாரின் தவறுகளை சுட்டிக்காட்டுவீர்கள்.

இன்று பணவரவுக்கான சாதகமான சூழ்நிலை இல்லை. அதனால் சேமிப்பும் இருக்காது.

இன்று ஆரோக்கியம் ஊக்கமளிக்கும் வகையில் இருக்காது. சளி மற்றும் தலைவலி உபாதைகள் ஏற்படலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். புதிய மனிதர்கள் மற்றும் புதிய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அவர்களை சந்திப்பதன் மூலம் உங்கள் மனதில் மகிழ்ச்சியும் நிறைவும் ஏற்படும்.

பணியிடத்தில் சந்திப்புகளின் பொழுது நீங்கள் புதுமையான கருத்துக்களைக் கூறுவீர்கள். இதை உங்கள் மேலதிகாரிகள் ஒப்புக்கொண்டு பாராட்டுவார்கள்.

உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப் புழக்கம் சிறப்பாக காணப்படும். உங்களால் சேமிப்பை உயர்த்த முடியும். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் உங்கள் முற்போக்கான வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. எதையும் சமநிலையோடு அணுக வேண்டும் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்திச் சவால்களைச் சமாளிக்க வேண்டும்.

இன்று கவனக் குறைவு ஏற்பட வாய்ப்புள்ளதால் பணிகளைக் கவனத்துடன் செய்ய வேண்டும். உங்கள் பணியைத் திறம்படச் செய்வதற்கு உங்கள் சக பணியாளர்களின் அறிவுரையை ஏற்று அதன் படி செயல்பட வேண்டும்.

இன்று பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அதன் விளைவாகக் காரணமே இல்லாமல் உங்கள் துணையிடம் குற்றம் கண்டுபிடிப்பீர்கள்.

இன்று பண வரவு சுமாராக இருக்கும்.




இன்று அசௌகரியங்கள் காணப்படும். சவால்களை சமாளிக்க இன்று நீங்கள் உங்கள் பணிகளைத் திட்டமிட வேண்டும். தளரா நம்பிக்கையுடன் தேவையற்ற எண்ணங்களிலிருந்து விடுபடவேண்டும்.

இன்று பணியிடச் சூழல் சாதகமான பலன்களைக் கொடுக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. அனுசரனையான போக்கை மேற்கொள்வதன் மூலம் உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவுக்கான சாத்தியம் இல்லை. உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு உங்கள் பணத் தேவைகளைச் சமாளிப்பதைக் கடினமாக உணர்வீர்கள்.

# மோட்டார் சைக்கிள் திருட்டுத் தொடர்பில் வவுனியாவில் பொலிஸாரால் ஒருவர் கைது

(கி.வசந்தன்)

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் இடம்பெற்ற இரு வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் கடந்த மாதம் வீடு ஒன்றில் இருந்து கைதொலைபேசி ஒன்றும் பிறிதொரு வீட்டில் இருந்து மோட்டர் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். அதற்கு மேலதிகமாக வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கு அமைவாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையிலான பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் முருங்கன் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவரை மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது திருடப்பட்ட மோட்டர் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசி என்பன மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளின் பின் அந்த நபரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸெ தெரிவித்தனர்.

